நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
**இலங்கை மதுவரித் திணைக்களம்**

# விலைமனுக்கோரல் - (IFB)

## இலங்கை மதுவரித் திணைக்களத்திற்காக காக்கி சீருடைத் துணி, பாதணிகள் மற்றும் காலுறை வழங்கலின் பெறுகை

1. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறையை பயன்படுத்தி மதுவரித் திணைக்களத்திற்காக பின்வரும் துணிகளின் வழங்கலுக்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து மதுவரித் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கூறுகள் | உருப்படி | தோரயமான அளவு (மீற்றர்கள் / சோடி) |
|---|---|---|
| A | காக்கி சீருடை துணி | 7,000 M |
| B | பாதணிகள் - நிறைவேற்று அதிகாரியின் - ஆண் | 60 |
| | - பரிசோதகர் - ஆண் | 370 |
| | - பரிசோதகர் - பெண | 05 |
| | - மற்ற பதவி நிலை – ஆண் | 800 |
| | - மற்ற பதவி நிலை – பெண் | 50 |
| C | காலுறைகள | 3,750 |

தேவைகள் மற்றும் விபரக்குறிப்புகளின் விரிவான விபரம் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.

2. ஆர்வம் கொண்ட மற்றும் தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் **ராஜகிரிய, கோட்டே வீதி, இல. 353, மதுவரித் திணைக்களம், 4ஆவது மாடி. கணக்குப் பிரிவு, தலைமை கணக்காளரிடம்** இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு **(2026.07.21) தொடக்கம் (பொது விடுமுறைகள் தவிர்த்து)** வார நாட்களில் **(மு.ப. 9.00 – பி.ப. 3.00) அலுவல நேரங்களில்** விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம் **தொலைபேசி இல. 011-2045062**

3. **ராஜகிரிய, கோட்டே வீதி. இல. 353, மதுவரி திணைக்களம், 4ஆவது மாடி, கணக்காளர் பிரிவுக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3,500.00 (மூவாயிரத்து ஐந்நூறு ஷரூபாய்)** செலுத்தி வர்த்தகப் பதிவுச் சான்றிதழின் பிரதி ஒன்றுடன் சேர்த்து **மதுவரித் திணைக்கள, ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதன்** மூலம் சாதாரண வேலை நாட்களில் **2026.08.10 ஆம் திகதி பி.ப. 3.00** அல்லது அதற்கு முன்னர் **(ஆங்கில மொழியில் மாத்திரம் கிடைக்கப்பெறும்)** விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும்.

4. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2026.07.28 ஆம் திகதி மு.ப. 10.00** இற்கு இடம்பெறும்.

5. விலைமனுக்களை **2026.08.11 ஆம் திகதி மு.ப. 10.00** அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு **பெறுகைக் குழு தலைவருக்கு அனுப்புதல் அல்லது 2026.08.11. ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் ராஜகிரிய, கோட்டே வீதி. இல. 353, மதுவரித் திணைக்களம், 4ஆவது மாடி, கணக்குப் பிரிவு, தலைமை கணக்காளரின் அறையில்** வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைனுக்கள் நிராகரிக்கப்படும். மின்னனு அல்லது வேறு முறைகளில் அனுப்பப்படும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

6. அனைத்து விலைமனுக்களும் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு பெறுமதிக்காக விலைமனு ஆவணத்தில் இணைக்கப்பட்ட வடிவத்தின் வங்கி உத்தரவாத வடிவில் நிபந்தனையற்ற **"விலைமனு பிணை"** ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை **2026.11.25** ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

| கூறுகள் | உருப்படி | ஏல உத்தரவாதத் தொகை (ஷரூ.) |
|---|---|---|
| A | காக்கி சீருடை துணி | 50,000.00 |
| B | பாதணி – அதிகாரி – ஆண்<br>- அதிகாரி – பெண்<br>- ஏனைய அதிகாரி – ஆண்<br>- ஏனைய அதிகாரி – பெண் | 150,000.00 |
| C | காலுறைகள் | 15,000.00 |

7. விலைமனுதாரர்கள் அனைத்து மூன்று (03) கூறுகள் அல்லது எந்த ஒன்று அல்லது பல கூறுகளுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட கூறுக்காக விலைமனு சமர்ப்பிக்கும் விலைமனுதாரர் ஒருவர், சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களுக்காக அனைத்துக் கூறுகளுக்கு தேவையான விலைமனு பிணைத் தொகைகளின் மொத்தத்திற்கு நிகரான பெறுமதியின் விலைமனு பிணை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியில் இருந்து **77 நாட்களுக்காக** விலைமனுக்கள செல்லுபடியாக இருத்தல் வேண்டும். **(2026.10.27 வரை)**

9. பெறுகை ஆவணங்களுடன் சேர்த்து முறையாக பொதியிடப்பட்ட மற்றும் முத்திரை இடப்பட்ட மாதிரிகளை, விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதிக்கு முன்னர் **ராஜகிரிய, கோட்டே வீதி. இல. 353, மதுவரித் திணைக்களம், திணைக்கள பெறுகைக் குழு, தலைவருக்கு** சமர்ப்பித்தல் வேண்டும்.

தேவையான சோதனை அறிக்கைகளைப் பெறுவதற்காக மாதிரிச் சோதனை கட்டணங்களை மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு ரொக்கப்பணத்தில் வைப்புச் செய்தல் வேண்டும் என்பதோடு கொடுப்பனவு ரசீதின் பிரதியை விலைமனுவுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும். மாதிரச் சோதனைக் பட்டணங்களுக்கான கொடுப்பனவுகளுக்கு வேறு எந்த கொடுப்பனவு முறைகளும் ஏற்கப்படமாட்டாது.

பெறுகை தேவைகளுக்கு இணங்காததன் காரணமாக நிராகரிக்கப்பட்ட மாதிரிகள் தரச் சோதனைக்கு அனுப்பப்பட மாட்டாது. அவ்வாறான சந்தரப்பத்தில், விலைமனுதாரர் மூலம் வைப்புச் செய்யப்பட்ட மாதிரிச் சோதனைக் கட்டணம் மீளளிக்கப்படும்.

பெறுகை தேவைகளுக்கு இணங்கும் மாதிரிகள் தரச் சோதனைக்கு அனுப்பப்படும். வைப்புச் செய்யப்பட்ட தொகையில் இருந்து பொருந்தும் ே சாதனைக் கட்டணங்கள் குறைக்கப்படும் என்பதோடு எஞ்சுகின்ற மீதம் விலைமனுதாரருக்கு மீளளிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குநருக்கு இறுதி ஒப்பந்தக் கட்டணம் செலுத்தப்படுவதற்கு முன், வழங்கப்பட்ட பொருட்கள் தொகுதியிலிருந்து எடுக்கப்படும் மாதிரிக்கு தரப் பரிசோதனை மேற்கொள்ளப்படும். அந்த மாதிரியின் பரிசோதனைக்கான செலவு, இறுதி ஒப்பந்தக் கட்டணத்திலிருந்து கழிக்கப்படும்.

| கூறுகள் | உருப்படி | மாதிரிக்காக சமர்ப்பிக்கவேண்டிய அலகின் எண்ணிக்கை (மீற்றர்கள் / சோடி) | மாதிரிச் சோதனைக் கட்டணம் |
|---|---|---|---|
| A | காக்கி சீருமை துணை | 02 (M) | 43,500.00 |
| B | பாதணி – அதிகாரி – ஆண் | 01 | இல்லை |
| | - அதிகாரி – பெண் | 01 | இல்லை |
| | - ஏனைய அதிகாரி – ஆண் | 01 | இல்லை |
| | - ஏனைய அதிகாரி – பெண் | 01 | இல்லை |
| C | காலுறைகள் | 02 | இல்லை |

10. பந்தி 5 இல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் மற்றும் / அல்லது ஏனைய அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை சமர்ப்பிபதற்கான இறுதித் திகதிக்குப் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

11. விலைமனுக்களின் தயாரிப்பு, சமர்ப்பிப்பு அல்லது விநியோகத்துடன் தொடர்புபட்டு விலைமனுதாரர்களால் ஏற்படும் எந்தவொரு செலவு அல்லது இழப்புக்கும் மதுவரித் திணைக்களம் பொறுப்பில்லை.

**தலைவர்**
**பெறுகைக் குழு**
**மதுவரித் திணைக்களம்,**
**இல. 353, கோட்டே வீதி, ராஜகிரிய.**
**2026.07.21**

SELACINE